

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி 14, 20, 25, 28, 31, 33, 36, 37, 40, ஆகிய வார்டுகளில் 100 கிலோ வாட் திறன் கொண்ட 10 மின்மாற்றிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் உடன் மேயர் ஜி.உதயகுமார், சன்.பிரகாஷ், வி.பேபிசேகர், அமுதாபேபிசேகர், செயற்பொறியாளர் சௌந்தரராஜன் சத்தியா கோ.ரவி, வெங்கடேசன், வே.ஹரி, யாஸ்மின்பேகம், பொ.ரமேஷ், திவ்யாதமிழ்வாணன், டாக்டர் ராஜேஷ்குமார், நாகராஜ், சக்திவேல், என்.கிருஷ்ணகுமார், விஜயன், தங்கவேல், பார்த்திபன், சு.பன்னீர் செல்வம், மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் நேற்று (05.05.2025) சென்னை கிண்டி முதன்மை தலைமை வனப்பபாதுகாவலர் அலுவலகத்தில் மாநில அளவிலான வனத்துறை உயர் அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம், நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுப்ரியா சாகு, ராகேஷ்குமார் டோக்ரா, (AIWC) உதயன், ஐ.அன்வருதின், தெபாஷீஷ் ஜானா, மீட்டா பானர்ஜி, மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம்,மே.6-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் 07.05.2025 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் மாளிகை“யில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இன்று 6ம்தேதி திருப்பத்தூரில்

# சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு



சிவகங்கை,மே 6 -

இன்று 6ஆம் தேதி செவ்வாய்க்கிழமை திருப்பத்தூரில் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளதாவது.

இன்று 6ம்தேதி சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் திருப்பத்தூரில் ராஜேஸ்வரி திருமணமண்டபத்தில் நடைபெற உள்ளது.திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாலை 4 மணி அளவில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் மாவட்டகழக நிர்வாகிகள், செயற்குழு ,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய ,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நிகழ்ச்சி நிரல்.

பொருள் .3.5 .2025 செவ்வாய்க்கிழமை. சென்னையில் கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் 3=5=2025 நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

2.கழக வளர்ச்சி பணிகள்.

இத்தகவலை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு!



அணி துணை செயலாளர்

தூத்துக்குடி, மே 6-

நாள் : 06.05.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

இடம் : கலைஞர் அரங்கம், தூத்துக்குடி.

தலைமை : திரு.G.செல்வராஜ், மாவட்ட அவைத்தலைவர்.

இக்கூட்டத்தில் மாநில கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள்:

1. 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்மந்தமாக..

2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

### மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமை!

# சென்னை மேற்கு மாவட்ட பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ப. பிரகாஷ் அறிக்கை!

சென்னை,மே.6-

சென்னை மேற்கு மாவட்ட இணைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட பகுதி இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (06.05.2025,) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள 20/ 32 காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கத்தில்மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் மாவட்ட அமைப்பாளர் ப. பிரகாஷ் முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.முனுசாமி ஏற்பாட்டில் எண்ணூர் மார்கட் அண்ணா சிலை அருகில் நீர்மோர் தண்ணீர் பந்தலை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி. சங்கர் தலைமை ஏற்று திறந்த வைத்து பொது மக்களுக்கு பழங்கள் மற்றும் நீர் மோர் குளிர்பானங்கள் வழங்கினார். இந்நிகழ்வில் கோமதி சந்தோஷ்குமார் எம்.சி., சந்தோஷ் குமார், இ.ரமேஷ், பாண்டியன், பிரட் சுரேஷ், ஸ்ரீ சரவணன், மு.தமிழ்மாறன், ச.சதிஸ், தே.சதிஸ்குமார், வி.யோகராஜ், மற்றும் தேசப்பன், ரமேஷ், திலகர், ஆர்.எஸ்.ரோடு முருகன், வேலுமணி, விஜி, மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு”!

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் அறிவிப்பு!



கோவை,மே.6-

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

3/5/2025 அன்று, சென்னையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில், நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தினை செயல்படுத்துகிற வகையில், கோவை மாநகர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில்,கீழ்காணும் இடங்களில்,

“நாடு போற்றும் நான்காண்டு”

தொடரட்டும் இது பல்லாண்டு!”

கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது.

கோவை மாநகர் மாவட்டம் .

நாள் : - 8.5.2025,

சிங்காநல்லூர் சட்ட மன்றத் தொகுதி . சிங்காநல்லூர் பகுதிக்கழகம் -1

தலைமைக் கழகப் பேச்சாளர்: திரு.பவானி கண்ணன்.இடம்: திருவள்ளுவர் நகர், ஒண்டிப்புதூர்.

கோவை தெற்கு சட்ட மன்றத் தொகுதி. காந்திபுரம் பகுதிக்கழகம்.தலைமைக் கழகப் பேச்சாளர் : அ.ஜாகீர் உசேன்.

இடம்: பட்டேல் ரோடு,

வடக்கு சட்டமன்றத் தொகுதி. வேலாண்டிபாளையம் பகுதிக் கழகம். தலைமைக் கழகப் பேச்சாளர்:அந்தியூர் சுப்பு (எ) சா.சுப்பிரமணியம்,

இடம்:திலகர் வீதி, வேலாண்டிபாளையம்.

9.5.2025.

சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி. சிங்காநல்லூர் பகுதிக்கழகம் -2,

தலைமைக் கழகப் பேச்சாளர்:எம்.ஜாபர்.

இடம்:பூங்கா திடல், உப்பிலிபாளையம்.

வடக்கு சட்ட மன்றத் தொகுதி.

மணியகாரன் பாளையம் பகுதிக் கழகம்.

தலைமைக் கழகப் பேச்சாளர்: திரு.சைதை சாதிக்.

இடம்: காந்திமா நகர், செல்வ விநாயகர் கோவில் அருகில்.

வடக்கு சட்ட மன்றத் தொகுதி.

பாப்பநாயக்கன்புதூர் பகுதிக்கழக திமுக.

தலைமைக் கழகப் பேச்சாளர்:கவிஞர் ஈரோடு இறைவன். இடம்:சீரநாயக்கன்பாளையம், மாரியம்மன் கோவில் மைதானம்.

நாள்:10.5.2025,

சிங்காநல்லூர் சட்டமன்றத்தொகுதி .

பீளமேடு பகுதிக்கழகம் -1.

தலைமைக் கழகப் பேச்சாளர்:திரு.அந்தியூர் சுப்பு (எ) சா.சுப்பிரமணியம்.

இடம்:ஹோப் காலேஜ், ஜீவா வீதி.

சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி.

சிங்காநல்லூர் பகுதிக்கழகம் -3. தலைமைக் கழகப் பேச்சாளர்:கோபி குமணன்.

இடம்:நஞ்சுண்டாபுரம், மாரியம்மன் கோவில் வீதி.

கோவை தெற்கு சட்ட மன்றத் தொகுதி. ராமநாதபுரம் பகுதிக் கழகம் திமுக.

தலைமைக் கழகப் பேச்சாளர்:க.அமிர்தலிங்கம்.

இடம்: திருச்சி சாலை, திருவள்ளுவர் நகர்.

கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி.

கணபதி பகுதிக்கழக திமுக.

தலைமைக் கழகப் பேச்சாளர்:பவானி கண்ணன்.

இடம்: சாஸ்திரி வீதி மைதானம், இரத்தினபுரி.

நாள்-11.5.2025.

சிங்காநல்லூர் சட்ட மன்றத் தொகுதி.

பீளமேடு பகுதிக்கழகம் -2.

தலைமைக் கழகப் பேச்சாளர்கள்:கவிஞர் ஈரோடு இறைவன். சொ.மதுமிதா.

இடம்:காய்க்கடை மைதானம் , பா.நா.பாளையம்.

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி.

பெரிய கடை வீதி பகுதிக் கழகம் -1.

தலைமைக் கழகப் பேச்சாளர்கள் : சைதை சாதிக். சி.கா.சுகன் மந்தரன்.

இடம்:காமராஜபுரம்.

கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி.

சாய்பாபா காலனி பகுதிக் கழகம்.

தலைமைக் கழகப் பேச்சாளர் : அந்தியூர் சுப்பு (எ) சா.சுப்பிரமணியம்.

இடம்:நாராயணசாமி வீதி, கண்ணப்ப நகர்.

நாள் : 12.5.2025.

சிங்காநல்லூர் சட்ட மன்றத் தொகுதி..

பீளமேடு பகுதிக்கழகம் -3.

தலைமைக் கழகப் பேச்சாளர் : கோபி குமணன்.

இடம்:மாரியம்மன் கோவில் திடல், உடையாம்பாளையம்.

கோவை தெற்கு சட்ட மன்றத் தொகுதி. பெரிய கடை வீதி பகுதிக் கழகம் -2. தலைமைக் கழகப் பேச்சாளர் :க .அமிர்தலிங்கம்.

இடம்:கோட்டைமேடு.

கோவை வடக்கு சட்ட மன்றத் தொகுதி.

வடவள்ளி பகுதிக் கழகம்.

தலைமைக் கழகப் பேச்சாளர் : பவானி கண்ணன்.

இடம்:பழைய பேருந்து நிலையம்,வடவள்ளி.

அதுசமயம், மேற்கண்ட பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில், கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள், மேயர் ,தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள்,

மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள்,கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள்,BLA-2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மண்டலம் 4 - 6 - பராமரிப்பு பணிகள்!

# கழிவு நீர் உந்து நிலையம் செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மே.6-

மண்டலம் - 4 (தண்டையார்பேட்டை) ஆர்.கே நகர் தெற்கு கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) கென்னடி ஸ்கொயர் கழிவுநீர் உந்து நிலையங்களிலிருந்து, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் பிரதான கழிவுநீர் உந்து குழாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 07.05.2025 அன்று காலை 10 மணி முதல் 09.05.2025 காலை 10.00 மணி வரை (48 மணி நேரம்) மண்டலம் - 4 மற்றும் மண்டலம் - 6 க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ் கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்படாது.

எனவே, தண்டையார் பேட்டை, மற்றும் திரு.வி.க நகர் மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் / துணை பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள்

1. மண்டலம் - 4 (தண்டையார்பேட்டை) 8144930904 8144930211 8144930254 ஆர்.கே நகர் தெற்கு கழிவுநீர் உந்து நிலையம் பாரதி நகர் கழிவு நீர் உந்து நிலையம் சாஸ்திரி நகர் கழிவுநீர் உந்து நிலையம் 2. மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) 8144930906 8144930215 8144930216 8144930217 8144930256 திரு.வி.க நகர் சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் ஜி.கே.எம் காலனி சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் பெரியார் நகர் கழிவுநீர் உந்து நிலையம் கென்னடி ஸ்கொயர் கழிவுநீர் உந்து நிலையம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் கால்பந்தாட்டப் போட்டி!

## டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. பரிசு வழங்கினார்!

வேலூர், மே 6 -

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாள் கால்பந்து போட்டி நடைபெற்றது.

வெற்றி பெற்ற அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பரிசு வழங்கினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாள் கால்பந்து போட்டி இரண்டு நாட்களாக நடந்து வந்தது. தொடக்க விழாவுக்கு காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. செயலாளர் எம். சுனில்குமார் தலைமைதாங்கினார்வட்டச் செயலாளர்கள் இளங்கோ’ சம்பந்தம் மாநகராட்சி கவுன்சிலர்கள் ரஜினி, டிடா சரவணன், வட்ட செயலாளர் சசிகுமார் வேலூர் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் கால்பந்து போட்டிகளை தொடங்கி வைத்தார்.

இரண்டாவது நாள் போட்டியை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார் உட்படட மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 அணிகள் கலந்து கொண்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்டி.எம். கதிர்ஆனந்த்கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற காட்பாடி ராயல் பிரதர்ஸ் யுனைடெட்அணிக்கு முதல் பரிசாகரூ.30ஆயிரம் இராணிப்பேட்டை சிப்காட் சரண் அணிக்கு இரண்டாவது பரிசாக 20ஆயிரம், சென்னை ஷாடோஅணிக்கு மூன்றாவது பரிசாக 15,000 காட்பாடி மிசன் காம்பவுண்ட் வாரியார்ஸ்அணிக்கு நாலாவது பரிசாக பத்தாயிரம் மற்றும் கோப்பைகளை வழங்கி பேசினார். காட்பாடி வடக்கு பகுதி செயலாளர்வன்னியராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பூஞ்சோலை சீனிவாசன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் அ. சாந்தகுமார் ஏற்பாட்டில்,23 அ வட்டச் செயலாளர் வி .ஆர். குப்பன் தலைமையில், காவாங்கரை பேருந்து நிறுத்தம் அருகே அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தலை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார் ஆகியோர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பழ வகைகள் மற்றும் நீர்மோர் ஆகியவற்றை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் சி. எஸ். எஸ் டி. சீனிவாசன், கேபிள் த.வே. கணேசன், ஜி.கே. இனியன், வட்ட நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மைதீன், ஹரி, சுதாகர், அம்மு மூர்த்தி ,அறிவழகன், பார்பன், முத்துகிருஷ்ணன், அப்துல் சமது, பார்த்திபன் ,பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், மாதவரம் வினோத், மணலி ஸ்டாலின், எலந்தனூர் வி. சிவபிரகாஷ் பிரான்சிஸ், தேவராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.